மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1981 " நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(இ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : " தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1981) " ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே " தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1981) " நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஈ) ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு 1981.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 25/1981) " ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.

1981 மார்ச் 6]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, '' தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1981) '' நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(பிற்பகல் 2—40)

(உ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்டமுன்வடிவு 1981.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதி